கவிதை

எனக்குக் கவிதை

கவிதைசெய்வீர் என்றெனக்குக் காதல் செய்தீர்
காரணங்கள் இன்றியெதும் கவிதை இல்லை
புவியீர்ப்பு ஒன்றின்றேல் பூமி மயானம்
பெய்துவிழும் மழையருவி புல்பூண் டில்லை
அவியெழுந்து யாகமெழும் ஆக்கும் மந்ரம்
அலைபாய வேதமெலாம் அருளைச் சொல்லும்
விதையின்றி முளையில்லை என்றன் பூமி
வேரின்றி எனக்கெதுவும் கவிதை இல்லை!

பள்ளத்தை நோக்கிநதி பதிந்தே ஓடும்
பள்ளத்தே யிருந்துகவி பதைத்தே யேறும்
கொள்ளையிடும் தமிழதுவே கவிதை என்றால்
கொடுவாளும் அதுவேதான் கயமை கொல்லும்
நெல்லுயர நீராகும் நெருப்பே ஆகி
நீதியிடும் போர்முனையின் நெடுவாள் ஆகும்
உள்ளநெகிழ்ந் தோடிவரும் ஊற்றே மண்ணின்
உயிர்ப்பாகும் பிரசவமாய் உதிரம் செய்யும்!

சொல்லுகள் கவிந்துவிடின் கவிதை இல்லை
தூசனங்கள் ஒருபோதும் கவிதை ஆகா
அள்ளிவரக் கரங்களுக்கு மலமா தேவை
அமுதமெனச் சொல்வதெலாம் விசங்கள் இல்லை
இல்லையில்லை இவையெதுவும் கவிதை இல்லை
இனியதமிழ் ஒன்றேதான் எழிற்பா அறிவீர்
தெள்ளுதமிழ் ஆர்நிலமும் தேசக் காற்றும்
செவியினிக்கக் கவிதைதரும் தேடாய் தம்பி!

- புதியபாரதி

எதிர்த்த நூல் அகம்

அகரம் எழுதிய மண்ணில்
கல்வித்தடம் பதிக்க
தமிழன் மூச்சாய்
நிமிர்ந்து நின்ற
நூல் அகம்
எரிந்து தவித்த கோரம்.
தழுவிப்புரட்ட
துடித்த கைகள்
சாம்பரை மட்டுமே
தொட்டழுத கோரம்.
விழி வர மறுத்த கண்ணீர்
முளைத்துப்பெருத்த உறுதி
இனவெறிக்கெதிராய்
சபதமெடுத்து
சங்கு முழங்கி
உயிர்த் தீ வளர்க்கும்
வேங்கைகள்.
நற்சிந்தனையை தரமறுத்து
ஏட்டுக்கல்வியையும்
பறித்த இனவெறி
முடிந்ததா?
தலைக்கனம் பிடித்த
தமிழன்.
ஓ! தலைக்கனம்
கல்விக்கனம்
வீரக்கனம்.
இனவெறி அரசால்
என்ன செய்ய முடிந்தது.

- நளாயினி தாமரைச் செல்வன்

குருதி படிந்த கவடுகள்

கழுமரம் கூடப் பூத்தது புதுமை
கவ்வாரியில் அன்பு பெருகிய மகிமை
பகைவரின் மனமும் கனிந்திடும் இனிமை
பார்த்தவர் கண்களும் பகர்ந்திடும் எளிமை

சிந்திய குருதியால் சிவந்தது வானம்
சிதறிய வார்த்தையால் பிறந்தது கானம்
முந்திய மானிடம் இழந்தது ஊனம்
முகவரி இழக்குமோ முதல்வனின் மானம்

தனிமையின் வேளையில் துணையாக வருவார்
தடுமாறும் வேளையில் தாங்கியே சுமப்பார்
அவமான நேரத்தில் ஆறுதல் தருவார்
அன்பினால் அனைத்தையும் ஆற்றியே மறப்பார்

வருத்தங்கள் வாழ்வில் திருத்தங்கள் தரலாம்
நெருக்கடிகள் எம்மை நெறிப்படுத்திடலாம்
அழுகைகள் அகத்தில் அமைதியைத் தரலாம்
வறுமைகள் வாழ்வில் திறமைகள் பெறலாம்

குருதியில் குளித்து இக் குவலயம் சிறக்க
இறுதிவரை இவ் வையகம் செழிக்க
உறுதியுடன் உள்ளத் தூய்மையும் இணைந்து
பெறுமதி மிக்க இன்னுயிரையும் ஈந்தார்

அயலவர் அன்பையே முதன்மையாய் நினைத்தார்
அடுத்தவர் துயரினை துடைத்திட முனைந்தார்
மன்னிப்பு அளித்திட மனங்களை உடைத்தார்
மானிட நேயத்தை மாண்புடன் விதைத்தார்

இறைவனின் அன்பை சுவைத்திடும் நேரம்
இமைகளின் ஓரம் கண்களில் ஈரம்
இறைவனிம் வார்த்தை எம் வாழ்க்கையின் சாரம்
இறைவனின் சித்தமே அனைவர்க்கும் வாசம்

-காவலூர் கண்மணி

காயமும் காதலே

பிரியங்களின் ஆளுமை
சிலநேரங்களில்..
காயப்படுத்துகிறது!
காயத்தின் காரணமும்
காதல்தான்!
காதலை உருக்கி நீ
காயப்படுத்து!
காயத்தை உருக்கி நான்
காதல்படுத்துகின்றேன்.!

- ரசிகவ் ஞானியார்

வல்லமை தாரீர்

இடி வீழ்ந்து இடி வீழ்ந்து
எரி தழல் பரவுதே
எரிமலைக் குழம்பினால்
எம் தமிழ் கருகுதே.
பூகம்பம் தினம் தினம்
ஊரெங்கும் வெடிக்குதே
புலியாளும் திருநாட்டில்
புரட்சிப் பூ மலருதே.
கையிலும் காலிலும்
விலங்குகள் சகிதம்
கட்டுண்டு கிடப்பதோ தமிழினம்
கயவர்கள் ஆட்சியில்
வஞ்சகத்தனங்களால்
குருதியில் குளிப்பதோ தமிழினம்
அல்லிலும் பகலிலும்
அமைதியை இழந்து
அடிமையாய் வாழ்வதோ தமிழினம்
வெல்லும் வரையிலே
விடிவினை நோக்கியே
போராடப் புகவேண்டும் தமிழினம்.
கழுகுகள் பறப்பதும்
கரும்புகை எழுவதும்
உடலங்கள் சிதறியே –எம்
உறவுகள் சிதைவதும்
பிணம் தின்னிப் பேய்கள்
தினம் எல்லை தாண்டி–எம்
தேசத்தை நாசமாய்
சுடுகாடு போல் ஆக்கி
சீரளித்திருப்பதும்
சுடு கலன் கொண்டும்
எறிகணை எய்தும்
எம் தமிழ் உறவுகள்
உயிர் தனைப் பறிப்பதும்
தினம் தினம் நிகழ்ந்திடும்
அமர்க்களம்.
வலிதாங்கி வலிதாங்கி
நெஞ்சம் நோக
விழி நீரில் விழி நீந்தி
விம்மல் தோன்ற
வழிந்தோடும் குருதியிலே
வானம் சிவக்க
தமிழினமாய் பிறந்ததும்
எம் குற்றம் தானோ
எழு தமிழா எழு தமிழா
எதிரி வீழ –இனி புது சரிதம்
தோன்ற.
விழிகளின் உணர்ச்சியில்
எரி தளல் தோன்றட்டும்
விடுதலை வேள்வியில்
வெளிச்சங்கள் தோன்றட்டும்
வல்லமை தாரீர் வல்லமை தாரீர்
வையகம் வாழும் தமிழ் உள்ளங்களே
துல்லியமாய் எங்கள் துன்பங்கள்
விலகிட
வல்லமை தாரீர் வல்லமை தாரீர்.
விழிகளின் உணர்ச்சியில்
எரி தளல் தோன்றட்டும்
விடுதலை வேள்வியில்
வெளிச்சங்கள் தோன்றட்டும்

- புதுயுகப் பிரியன்

Krishnamoorthy Jothidam

Pandit Krishnamoorthy

SPT Super Stores,
355A High Street North,
Manor Park, E12 6PQ
Opening Hours: 9.00 a.m – 8.00p.m all 7 days.
Mob : 07506 936 133

இந்தியாவில் இருந்து முதன் முறையாக வருகை தந்துள்ள **கிருஸ்ணமூர்த்தி சாஸ்திரிகள்** அவர்கள் தேவி அருள் கொண்டு கைரேகை மூலம் முகநாடி மூலம் துல்லியமாக நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப் போகின்றவை பற்றிய விபரங்களைக் கூறுவார். துல்லியமாகக் கணித்துப் பார்க்கப்படும் விடயங்கள் கணவன் மனைவி ஒற்றுமை, விசா பிரச்சனை, உடல் நலம், திருமண யோகம், வாஸ்து சாஸ்திரம், தொழில், வியாபாரம், லக்சுமீகர விடயம், கண் திருஷ்டி, கோட் வழக்குகள், வாகனப் பொருத்தம், தமிழ், இந்தி, ஆங்கிலம், தெலுங்கு, கன்னடம், ஆகிய மொழிகளில் சாஸ்திரம் சொல்லப்படும். அவர் பல நாடுகளில் விஜயமிட்டு பலரினது பிரச்சனைகளையும் தீர்த்து வைத்திருக்கிறார். வீடு, கடை மற்றும் தனி நபர்களின் நலனுக்காகவும், பாதுகாப்பாகவும் தகுந்த பூஜைகளை செய்வதிர் வல்லுநர். நீங்கள் எத்தனையோ ஜோதிடர்களைப் பார்த்திருந்தாலும் ஒருமுறை சந்தித்து விசேசத்தை நேரில் அறிந்திடுங்கள்.

Pandit Krishnamoorthy

He visited so many countries and had successfully solved problems for many people.

An expert pandit at service. Past, Present and Future of your life, will be read over to you from your Numerology, Face reading, Palm reading & Horoscope reading Prediction in Business, Education, Job, love, Marriege, Family problem, Sickness, Promotion, Visa, Court, Lottery, Money, Removal of enemy. All types of black magic and evil things removed. He does protection thing for house, shop and personal matters will not be kept in confidence.

SPOKEN LANGUAGES: TAMIL,HINDI, TELUNGU & ENGLISH.